Regd. No. M. 3734. | 4 பக்கங்கள் | விலை காலணா

விடுதலை

VIDUTHALAI

தமிழர் தினசரி.

ஆசிரியர்: பண்டித எஸ் முத்துசுவாமிப் பிள்ளை

மலர்-3] ஈரோடு (2-9-1937) ஈசுவர ஹ ஆவணி மீ 18௳ வியாழக்கிழமை [இதழ்-55

"விடுதலை"

விளம்பர விகிதம்

சர்க்கார், ரயில்வே, முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு, கோர்ட்டு, கம்பெனி, பாங்கி ஆகியவைகள் சம்பந்தப்பட்டவைகளுக்கு பத்தி அங்குலம் 1-க்கு ரூ. 2-0-0 ஒப்பந்தமில்லாத தனிப்பட்ட வியாபார விளம்பரங்களுக்கு அங்குலம் 1-க்கு ரூ. 1—0—0 ஒப்பந்த விளம்பரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

"விடுதலை"

சந்தா விபரம்

உள்நாடு

தபால் மூலம் அனுப்ப முன் பணமாக மாதம் ஒன்றுக்கு

சந்தா	0	11	0
6 மாதத்திற்கு	4	0	0
ஒரு வருஷத்துக்கு	7	8	0
ஏஜண்டுகள் உள்ள இடத்தில் பத்திரிகை 1-க்கு விலை	0	0	3

நரிமனுக்கு பம்பாய் மந்திரி ஆதரவு.

சர்தார் சூழ்ச்சிகளை விளக்க சாட்சியம்.

டஜன் சட்டசபை மெம்பர்கள் கொடுக்கத் தயார்

நரிமன் நண்பர்களை விரோதிகளாக்கச் சூழ்ச்சி.

ஜாதி பெயராலும் மதத்தின் பெயராலும் அயோக்கியப் பிரசாரம்.

சர்தாரைக் குற்றவாளியாக்க காந்திஜி தயக்கம்.

நரிமன்-படேல் தகராறு நெருக்கடி

"திரிகால்" பத்திரிகையில் அப்பத்திரிகையின் அரசியல் நிருபர் ஆகஸ்டு 24-ந்தேதி வெளியிட்டிருக்கும் ஒரு நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நரிமன்—படேல் தகராறைப்பற்றி பம்பாய்ச் சட்டசபை மெம்பர்களில் சுமார் ஒரு டஜன் பேர் தமது ருசுக்களை காந்திஜிக்கு அனுப்பி விட்டதாகத் தெரிய வருகிறது.

சட்டசபை மண்டபத்தில் சட்டசபை வேலைகளை மெம்பர்கள் கவனித்து வருவதாகப் பொதுவாகத் தோன்றினும் நரிமன்—படேல் தகராறு மெம்பர்களுக்குள்ளே மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியிருப்பதாகத் தெரியவருகிறது.

தனக்கு சட்டசபைத் தலைவராகும் விஷயத்தில் அவ்வளவு அக்கரையில்லையென்றும் தன்னை அரசியல் வாழ்விலிருந்து அப்புறப்படுத்த காங்கரஸ்காரர்களுக்குள் நடைபெற்றுவரும் சூழ்ச்சிகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா இல்லையா என்பதை மட்டும் பகிரங்கமாகத் தெரிவித்து விட்டால் போதுமென்றும் தோழர் நரிமன் பம்பாய் சட்டசபை மெம்பர்களிடம் கண்டிப்பாகத் தெரிவித்து விட்டாராம்.

சர்தாரின் சகாக்கள் தோழர் நரிமன் போக்குவரத்துகளை வெகு நுட்பமாக கவனித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

நரிமனுக்கு அநுகூலமான ருசுக்களைத் தடுக்க சர்தாரின் சகாக்கள் செய்துவந்த முயற்சிகள் இது வரைப் பலிக்கவில்லை.

எனவே பனச்சோர்வடைந்து அம்முயற்சியை அவர்கள் கைவிட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

தோழர் நரிமனை ஆதரிக்கப் போகும் சட்டசபை மெம்பர்கள் சர்தார் படேல் பக்கம் திருப்ப பெய்ஸ்பூர் காங்கரஸ்வரவேற்புத் தலைவர் தோழர் சங்கர்லால் தேவ் கூட முயன்று பார்த்தாராம்.

தோழர் நரிமன் மீது காங்கரஸ் கமிட்டியாருக்கு நம்பிக்கையில்லையென்று பம்பாய் சட்டசபை மெம்பர்கள் அறியுமாறு கூட சூழ்ச்சிகள் செய்யப்பட்டனவாம்.

நரிமனை ஆதரிக்கத் துணிந்து நிற்கும் ஹிந்துச் சட்டசபை மெம்பர்களை மதத்தின் பேராலும் ஜாதியின் பேராலும் நரிமனுக்கு எதிரிகளாகவும் முயற்சி செய்யப்பட்டதாம்.

கூர்ஜரச் சட்டசபை மெம்பர்கள் எவரும் சர்தார் படேலின் பகையை சம்பாதித்துக்கொள்ள விரும்ப மாட்டார்கள் போல் தோற்றுகிறது.

ஏனெனில் கூர்ஜரத்தில் சர்தாரே சர்வாதிகாரியாக விளங்குகிறார்.

மற்றும் சர்தாரைக் குற்றவாளியாக்க காந்திஜியும் கூட உடைந்தையாக மாட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் பம்பாய் மந்திரிகளில் ஒருவர் சர்தாரின் விருப்பையோ வெறுப்பையோ லக்ஷியம் செய்யாது உண்மையைக் கூறி விட நிச்சயித்திருப்பதாய் நம்பத்தக்க இடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

மேல் நடக்கப்போகிறதை பம்பாய் நகரத்தார் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்றார்கள்.

துறையூர் சுயமரியாதைச் சங்கம்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(ஒரு நிருபர்)

துறையூர், ஆகஸ்டு 30

ஷை சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் நேற்று இரவு 9-மணிக்குக் கூடியது.

அதில் மகாநாட்டு வரவு செலவுக் கணக்கை முடிவு செய்ய வேண்டுமென்றும் தங்கள் அழைப்புக்கிணங்கி நாடகம் நடத்திய திருச்சி அமெச்சூர் சுதிக சபையாரைப் பாராட்டியும் மேற்படி சபையார் மீண்டும் துறையூருக்கு வந்து நாடகம் நடத்தவேண்டுமெனவும் ஹிந்தி எதிர்ப்புப்பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் எனவும் திருநெல்வேலியிலிருந்து புறப்படும் ஹிந்தி எதிர்ப்பு ஜாதாவிற்கு சங்கத்திலிருந்து பிரதிநிதிகள் அனுப்ப வேண்டுமெனவும் துறையூரில் தாற்றித்திரிபவர்க்குத் தக்கபதில் கூற, "நகாதூதன்" ஆசிரியர் இடம்தரவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறியன.

சென்னைச் சட்டசபை.

நடவடிக்கைச் சுருக்கம்.

சென்னை, செப்டம்பர் 1.

நேற்று கூடிய சென்னைச் சட்டசபையில் புதச் சீர்திருத்தத்தை நிராகரிப்பது, பிரதிநிதித்துவ சபை சட்டசபை கூட்டி எதிர்கால அரசியல் நிர்மயம் செய்வது என்ற "தேசியக் கோரிக்கை" தீர்மானம் வோட்டெடுக்காமலே நிறைவேறியது.

இன்று முதல் மந்திரி 1937-38 வது வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை அசம்பளியில் ஹாஜர் செய்தார். அதன் சாரம வேறிடத்தில் வெளி வருகிறது.

அசம்பளித் தலைவர், உப தலைவர் கௌன்சில் தலைவர், உபதலைவர், பார்லிமெண்டரி காரியதரிசிகள், அசம்பளி கௌன்சில் மெம்பர்கள் சம்பள மசோதா நிறைவேற்றப்பட்டது. அதன்படி,

அசம்பிளித் தலைவர் சம்பளம் 500, வீட்டுஅலவன்ஸ் 100 வாகன அலவன்ஸ் 150,

உதவித் தலைவர் சம்பளம் 150.

கௌன்சில் தலைவர் சம்பளம் 150, வீட்டுஅலவன்ஸ் 100, வாகன அலவன்ஸ் 150.

கௌன்சில் உதவித் தலைவர் சம்பளம் 150.

பார்லிமெண்டரிக் காரியதரிசிகள் சம்பளம் 250, வீடு, வாகன அலவன்ஸ் 150.

மந்திரிகளுக்கும் அசம்பிளி, கௌன்சில் தலைவர்களுக்கும் வாகனங்கள் வாங்க சர்க்காருக்கு அதிகாரம்.

அசம்பிளி கௌன்சில் மெம்பர்கள் சம்பளம் 75 ரூபாய்.

அடுத்த காங்கரஸ் தலைவர்

தோழர் எஸ். சி. போஸின் பெயர் சிபார்சு

கல்கத்தா, ஆகஸ்டு 31

வரப்போகிற காங்கரஸ் மகா சபைக்கு தலைவராக தோழர் சுபாஷ் சந்திரபோஸின் பெயரையே தோழர்கள் காந்தியாரும் பண்டித ஜவஹர்லால்நேரும் சிபார்சுசெய்திருப்பதாய் தெரிய வருகிறது.

சென்னை வரவு செலவு திட்டம்.

75 லக்ஷம் வரி வஜா

விவசாயிகள் கடன் நிவாரணத்துக்கு 30 லக்ஷம்.

கைத்தறி நெசவுக்கு 2 லக்ஷம்.

ஜவுளி வியாபாரிகளுக்கு லைசென்ஸ் கட்டணம்.

உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் 2½ முதல் 30 பெர்சண்டு வரை வெட்டு.

சென்னை, செப்டம்பர் 31.

1937-38 வது வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைப் பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாச்சாரியார் இன்று சென்னை சட்ட சபையில் ஹாஜர் செய்தார். அதன் சாரம் பின் வருமாறு:-

நிலவரியில் 75 லக்ஷம் வஜா செய்து விவசாயிகளுக்கு உதவி.

பூர்வாங்கமாக சேலம் ஜில்லாவில் பூரண மதுவிலக்கு. அதனால் சர்க்காருக்கு ஏற்படக் கூடிய நஷ்டம் சுமார் 25-லக்ஷம்.

கைத்தறி நெசவுக்கு 2-லக்ஷம்.

கிராமங்களில் ஆகாச வசனிகள் ஸ்தாபித்தல்.

கிராமங்களில் புது ஆஸ்பத்திரிகள் திறப்பதற்கும் மருத்துவச்சிகளை வைத்துக்கொள்வதற்கும் பொருளுதவி.

நீர்ப்பாசன சாக்கடைத் திட்டங்கள் முதலியன ஏற்படுத்துவதற்கு 13¼ லக்ஷம். 2½ பெர்செண்டு முதல் 30 பெர்செண்டு வரை உத்தியோகஸ்தர் சம்பளங்களில் வெட்டு.

சேலத்தில் முஸ்லிம் பொதுக்கூட்டம்

பாலஸ்தீன பிரிவினைக்கு எதிர்ப்பு.

பசுபாதுகாப்பு மசோதா கண்டனம்.

(ஒரு நிருபர்)

சேலம், ஆகஸ்டு 31

ஷை கூட்டம் 29-8-37ந்தேதி மாலை 5 மணிக்கு முஸ்லீம் சர்விஸ் லீகின் ஆதரவில் ஜாமியா மஸ்ஜித மைதானத்தில் தோழர் எ. செய்யதுஜலால் சாகிப் பகதூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பாலஸ்தீன பிரிவினையைக் கண்டித்தும் பசுபாதுகாப்பு மசோதாவைக்கண்டித்தும் பேசினர். ஷை இரண்டு விஷயங்களைப் பற்றிய கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஷை தீர்மானங்களை சர்க்காருக்கு அனுப்ப ஜனாப் எ. செய்யது ஜலால்சாகிப் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

தென்காசியில் ஹிந்திக்கு கண்டனம்

(நமது நிருபர்)

தென்காசி, ஆகஸ்டு 31.

தென்காசி போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் தோழர் பி. என். கணபதியா பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் ஹிந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் கூடிற்று.

கீழ் வகுப்புகளுக்கு ஹிந்தியை கட்டாயப் பாடமாக்க உத்தேசித்திருப்பதை கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.